SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

டிசம்பர் - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettgam.com

Also available @ BOOKMARK

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# டிசம்பர் - 2018

## தமிழ்நாடு

1. **சாகித்ய அகாடமி விருது 2018** :

| எழுத்தாளர் | நாவல் | நாள் |
|---|---|---|
| S. ராமகிருஷ்ணன் | சஞ்சாரம் | டிசம்பர் 5, 2018 |

2. **எழுத்தாளர் பிரபஞ்சன்** : தனது “வானம் வசப்படும்” என்ற படைப்பிற்காக 1995ம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருது பெற்றார். அவர் 21 டிசம்பர் 2018 அன்று மறைந்தார்,

**அவரது படைப்புகள்** :

i) ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள்
ii) பிரமம்
iii) நேற்று மனிதர்கள்
iv) ஆண்களும், பெண்களும்
v) மானுடம் வெல்லும்
vi) சுகபோக தீவுகள்
vii) மகாநதி

3. **தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல் கொள்கை** - 2018

i) 2018 டிசம்பர் 12 ஆம் நாளன்று மாநில அரசாங்கம் இக்கொள்கையினை வெளியிட்டது

ii) **நோக்கம்** : விவசாயிகளின் வருமானத்தினை அதிகரித்தல், உணவுப் பொருட்கள் வீணாகுதலை குறைத்தல், பண்ணைப் பொருட்களின் மதிப்புக் கூட்டல்.

4. **76 வது தமிழ் இசைத் திருவிழா விருதுகள்** :

| | |
|---|---|
| **இசைப் பேறறிஞர்** | உமையாள்புரம் கே.சிவராமன் |
| **பண்ணிசைப் பேறறிஞர்** | பழனி கே.வெங்கடேசன் |

5. **தேஜஸ் ரயில்** : தென்னக ரயில்வே ஆனது சென்னை மற்றும் மதுரை இடையிலேயான உயர்தர அதிவேக ரயில் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ரயிலானது 495 கிலோமீட்டர் தூரத்தினை 70கி.மீ/மணி வேகத்தில் 7 மணி நேரங்களில் கடந்திடும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

6. புனேவில் நடைபெற்ற மிஸர்ஸ்.இந்தியா யூனிவர்ஸ் குளோப் - 2018 ஆண்டிற்கான (Mrs.India Universe Globe-2018) விருது. திருமதி.சம்யுக்தா பிரரேம் எனும் கோவையைச் சேர்ந்த பெண்மணிக்கு வழங்கப்பட்டது.

7. **தூய்மை இந்தியா தூதுவர்** : **ஹனிபா சாரா** எனும் 7 வயது சிறுமி ஆம்பூர் நகராட்சிக்கான தூய்மை இந்தியா திட்ட தூதுவராக நியமிக்கப்பட்டார்.

8. **டி.என்.பி.எஸ்.சி சாலை** : பிரேசர் பால சாலை எனும் சென்னை கோட்டைக்கு அருகிலுள்ள சாலை டி.என்.பி.எஸ்.சி சாலை எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது

9. **முதல் இசை அருங்காட்சியகம்** : தமிழக அரசு, மத்திய அரசின் உதவியுடன் நாட்டின் முதல் இசை அருங்காட்சியகத்தை திருவையாறில் அமைக்கப்படும் என அறிவித்துள்ளது.

10. 181 – 24 * 7 உதவி எண் : தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தேசிய மகளிர் பாதுகாப்பு மற்றும் சேவைக்கான தொலைபேசி உதவி எண் 181 சேவை திட்டத்தினை தமிழ்நாட்டில் தொடங்கி வைத்தார்.

11. **பிங்க் ஆட்டோக்கள்** : சென்னை போக்குவரத்து போலீசார் மற்றும் ஆன்ஸ் ஃபோரம் ரோட்டரி இன்டர்நேஷனல் இணைந்து (Anns Forum Rotary International) பெண்கள் பாதுகாப்பிற்காக “பிங்க் ஆட்டோக்கள்” எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

12. **இலவச பேட்டரி ஆட்டோக்கள்** : தென்னக ரயில்வே ஆனது தாம்பரம் இரயில் நிலையத்தில் முதியவர்கள் மற்றும் மாற்று திறனாளிகளுக்காக இலவச பேட்டரி ஆட்டோக்கள் எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

13. **பசுமைக் கோயில்கள்** : இந்து சமய மற்றும் அறநிலையத் துறை, பசுமை கோயில்கள் திட்டத்தின் கீழ் 20,000க்கும் மேலான கோயில்களை புதுப்பிக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது.

14. **ஆயுஷ் ஆரோக்கிய மையம் (Ayush Wellness Centre):** மாநில சுகாதார அமைச்சர், எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக வளாகத்தில் சித்த மருத்துவம், ஆயுர்வேதம் மற்றும் யோகா, இயற்கை மருத்துவம் ஆகியவற்றுக்கான ஆயுஷ் ஆரோக்கிய மையத்தை தொடங்கி வைத்தார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

15. **இரயில் - பேருந்து (Train-Bus)**: குன்னூர் முதல் உதகமண்டலம் வரையிலான சிறப்பு வாய்ந்த பழம்பெரும் இரயில் - பேருந்து சேவையானது சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்டது.

16. **மனம்சார் அருங்காட்சியகம் (Mind Museum)**: எழும்பூர் அருங்காட்சியகத்தில் மனநல சிகிச்சை குறித்த மனம்சார் அருங்காட்சியகம் நிறுவப்பட உள்ளது.

17. **LKG & UKG வகுப்புகள்** : ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் திட்டத்தின் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதும் அங்கன்வாடி பள்ளிகளில் மான்டிசோரி கல்வி முறையில் அமைந்த LKG மற்றும் UKG வகுப்புகள் அறிமுகம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

18. **குழந்தைகளுக்கான ஆதார் சேர்க்கை** : ஆதார் சேர்க்கைக்கு புதிய திட்டத்தை முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தொடங்கி வைத்தார். அதன் படி 5 வயதிற்கு குறைந்த குழந்தைகளுக்கு அவர்களின் வீடுதேடி ஆதார் இணைப்பு மேற்கொள்ளப்படும்.

19. **Navic SATPHONES** : தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, கடலில் பயணம் செய்யும் போது உதவக்கூடிய Navic (Navigation with Indian Constellation) செயற்கைக்கோள் தொலைபேசிகளை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

20. **DT3 – Digital Disruption and Transformation Conference :** மூன்றாவது வருடாந்திர டிஜிட்டல் இடையூறு மற்றும் உருமாற்ற மாநாடு FICCI தமிழ்நாடு மாநிலக் குழுவினால் சென்னையில் 13 டிசம்பர், 2018 அன்று நடத்தப்பட்டது.

21. **WEAVES, தென்னிந்தியாவின் உயர்தர ஜவுளி கண்காட்சி**: தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்ட டெக்ஸ்வேலி (Texvalley) என்னுமிடத்தில் 5-8 டிசம்பர் வரை நான்கு நாள் சர்வதேச ஜவுளி கண்காட்சி நடைபெற்றது. "**தலைப்பு : நெசவாளர்களுக்கான சர்வதேச இணைப்பு**".

22. **திருக்குறளின் புதிய பதிப்பு** : சர்வதேச தமிழ் ஆராய்ச்சி நிறுவனமானது (IITS) பிராமித் தமிழி எழுத்து வடிவத்தில் புதிய திருக்குறள் பதிப்பினை வெளியிட்டுள்ளது.

23. **எனது மருத்துவமனை (Mera AsPataal):** புதுவையிலுள்ள ஜிப்மர் மருத்துவமனை ஆனது இந்தியாவினுடைய சிறந்த மத்திய அரசின் மருத்துவமனைக்கான விருதினைப் பெற்றுள்ளது.

24. **தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா** : சர்வதேச பலூன் திருவிழா பொள்ளாச்சியில் ஜனவரி 4 – 6 அன்று நடக்கவிருக்கிறது.

25. இந்து சமய அறநிலையத் துறையானது யானையின் சாணத்தில் இருந்து காகிதம் தயாரிக்கும் பணியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

26. **HAND – TEX 2018 :** தேசிய கைத்தறி கண்காட்சியான "HAND – TEX 2018" சென்னையில் டிசம்பர் 15 முதல் 30, 2018 வரை நடைபெற உள்ளது.

27. **தமிழ் டெலிகிராம்:** தமிழ் தந்தி தோன்ற காரணமாயிருந்த அ.சிவலிங்கம் 16, டிசம்பர் 2018 தேதி மறைந்தார்.

28. சென்னையின் அரசுப் பள்ளிகளில், பெண் மாணவிகளிடையே தூய்மை மற்றும் சுகாதார மேம்பாட்டிற்காக, மின்வழி சுகாதார அணையாடை எரியூட்டிகள் அமைக்கப்படவுள்ளது.

## தேசம்

1. **இந்தியா @ 75 தொலைநோக்கு ஆவணம்:** தேவையான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு 2022-23 ஆம் ஆண்டில் 9% சதவீத உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி அவசியம் என நிதி ஆயோக் வெளியிட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**திட்டம் 2022 - 23 :**

i) **இலக்கு:** 2017-18 ஆம் ஆண்டின் உள்நாட்டு உற்பத்தியில் 17 சதவீதமாக உள்ள முதலீட்டு வீதத்தினை 2022-23ல் 36% ஆக உயர்த்துதல்.

ii) வரி மற்றும் உள்நாட்டு உற்பத்தி இடையிலான விகிதம் 17% லிருந்து 27% வீதமாக உயர்த்துதல்.

iii) அனைத்துக் கிராமங்களும் டிஜிட்டல் தொழில் நுட்பத்தின் மூலம் இணைக்கப்படுதல்.

iv) **விவசாயம்:** e-NAM மூலமாக விவசாய தொழில் முனைவோரை அதிகரித்தல்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

v) **சாலை மற்றும் இரயில் பாதைகள்** : கட்டாயமாக சாலை பாதுகாப்பு விதிகளை வகுத்தல் மற்றும் இரயில் கட்டணங்களை சீர் செய்தல்.

vi) **சிவில் மற்றும் நீதி சேவைகள்** : குடிமைப் பணி போட்டி தேர்வுகளில் பங்கு பெற உச்சபட்ச வயது வரம்பினை 30லிருந்து 27ஆக குறைத்தல்.

2. **வாடகைத்தாய் மசோதா** : லோக்சபாவில் வாடகைத்தாய் மசோதா-2016 நிறைவேற்றப்பட்டது. இது வணிக ரீதியில் வாடகைத்தாய், குழந்தைகள் பெற்று தருவதை தடை செய்வதன் மூலம் பெண்கள் சுரண்டப்படுதலை அகற்றி அவர்களை காக்கவும், மேலும், சேவை மனப்பான்மையிலான வாடகைத்தாய் முறை மட்டுமே (உற்றார் உறவினர்களிடையே) ஏற்புடையதென்றும் உறுதி கூறுகின்றது.

3. திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) மசோதா 2016 லோக், சபாவில் நிறைவேற்றப்பட்டது. இது திருநங்கை சமூகத்தினர் தனித்த அடையாளத்தோடு உரிமைகள் பெற்று வாழ்வதை அதிகாரம் அளிக்கின்றது.

4. **POSCO சட்டத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் :** (Protection of Children from Sexual Offences, Act) பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாத்தல் சட்டம், 2012.

   i) சட்டத் திருத்தங்களின் வாயிலாக, 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆண், பெண் எவர்க்கும் அவர்கள் மீது நடத்தப்படும் மோசமான பாலியல் தாக்குதல் மற்றும் இதர குற்றங்களுக்கு மரண தண்டனை உட்பட அதிகபட்ச தண்டனைகள் விதிக்கப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

   ii) சட்டத் திருத்தத்தின் மூலம். மோசமான பாலியல் தாக்குதலுக்கு குறைந்தபட்சம் 10 அல்லது 20 வருட சிறை தண்டனையிலிருந்து அதிகபட்சமாக ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனையேனும் விதிக்கப்படலாம்.

   iii) இத்தகு சட்டத் திருத்தங்கள், இயற்கை பேரிடர்கள் மற்றும் பேரழிவுகளின் போது நடந்தேறும் குழந்தைகளின் மீதான பாலியல் வன்புணர்வு குற்றங்களை குறைத்து குழந்தைகளை காக்கும் நோக்கில் கொண்டுவரப்படுகின்றது.

   iv) இந்த சட்டத் திருத்தங்கள் பாலியல் குற்றங்கள் குறித்த தெளிவான வரையறை மற்றும் விளக்கங்களையும் அளிக்கின்றது. அவை வணிக லாப நோக்கில் குழந்தைகள் மீது வற்புறுத்தி செலுத்தப்படும்

ஹார்மோன் ஊசிகள் போன்ற கொடுஞ்செயல்களையும் உட்சேர்த்துள்ளன.

5. **தேசிய ஹோமியோபதி ஆணைய மசோதா, 2018:** மத்திய ஹோமியோபதிக் குழு எனும் அமைப்பிற்கு மாற்றாக தேசிய ஹோமியோபதி ஆணையம் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

6. **இந்திய மருத்துவ முறைகளுக்கான தேசிய ஆணைய மசோதா, 2018:** தற்போது செயல்பாட்டிலுள்ள மத்திய மருத்துவ கவுன்சில் அமைப்பிற்கு பதிலாக இந்திய மருத்துவ முறைகளுக்கான தேசிய மருத்துவ ஆணையம் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

7. மத்திய அரசானது அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் உள்ள மூன்று தீவுகளை பெயர் மாற்றம் செய்துள்ளது.

| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| **ரோஸ் தீவு** | நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தீவு |
| **நீல் தீவு** | சாகீத் த்வீப் தீவு |
| **ஹேவ்லாக் தீவு** | சுவராஜ் த்வீப் தீவு |

8. **ஜனாதிபதி ஆட்சி** : அரசியலமைப்புப் பிரிவு 356ன் கீழ் ஜம்மு காஷ்மீரில் 20 டிசம்பர், 2018 முதல் ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்பட்டது.

9. **விவசாய ஏற்றுமதிக் கொள்கை, 2018 (Agriculture Export Policy, 2018)** : 2022 ஆண்டிற்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கில் மத்திய அரசு ஆனது விவசாய ஏற்றுமதி கொள்கை 2018க்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

10. **2019 ஆம் ஆண்டின் குடியரசு தின விழாவுக்கான சிறப்பு விருந்தினர்** : தென்னாப்பிரிக்காவின் ஜனாதிபதி திரு.சைரிஸ் ராமபோசா 26, ஜனவரி 2019 நாளன்று குடியரசு தின சிறப்பு விருந்தினராக பங்கெடுக்க உள்ளார்.

11. **இ - ஸ்கூட்டர் உரிமம்** : மத்தியப் போக்குவரத்து அமைச்சகம் ஆனது மோட்டார் வாகன விதிகளை மாற்றியமைத்து 16 முதல் 18 வயதிலான நபர்கள் ஓட்டுனர் உரிமம் பெறுவதோடு அதிகபட்சமாக 70 கி.மீ./மணி

வேகம் செல்லும் 50 சிசி ரக மின்சார வாகனங்கள் ஓட்டவும் அனுமதியளித்துள்ளது.

12. **TRAIN – 18**: இந்தியாவின் முதலாவது இன்ஜினில்லா இரயிலானது 180 கி.மீ வேகத்தில் சோதனை ஓட்டம் செய்யப்பட்டது. இதன்படி சதாப்தி எக்ஸ்பிரஸ் பெற்றுள்ள இந்தியாவின் அதிவேக இரயில் எனும் பெருமையினை இது பெறுகின்றது.

13. **ரிசர்வ் வங்கி ஆளுநர் ராஜினாமா** :

i) ரிசர்வ் வங்கி ஆளுநர், உர்ஜித் பட்டேல் 10 டிசம்பர் 2018 நாளன்று தனது ராஜினாமா முடிவினை வெளியிட்டார்.

ii) ரிசர்வ் வங்கி ஆளுநர் மத்திய நிதியமைச்சரின் பரிந்துரையின் பேரில் பிரதமர் அலுவலகத்தால் நியமிக்கப்படுகிறார்.

iii) உர்ஜித் பட்டேல் (2016-2018) சுதந்திர இந்தியாவில் ராஜினாமா செய்த 5வது ரிசர்வ் வங்கி ஆளுநராவார்.

| எண் | ராஜினாமா செய்த RBI ஆளுநர்கள் | காலம் |
|---|---|---|
| **1.** | பெனேகல் ராமா ராவ் | 1949 - 1957 |
| **2.** | கே.ஆர்.பூரி | 1975 – 1977 |
| **3.** | ஆர்.என். மல்கோத்ரா | 1985 – 1988 |
| **4.** | பிமல் ஜலான் | 1997 – 2003 |
| **5.** | (சுதந்திரத்திற்கு முன்பு) சர் ஆஸ்பர்ன் ஸ்மித் | 1937 |

14. **கைகா அணு ஆலை** : கர்நாடகாவிலுள்ள கைகா (Kaiga) அணு ஆலை 941 நாட்கள் இடைவிடாது செயல்பாட்டில் இருந்து லண்டனிலுள்ள ஹேசாம் அணு உலையின் (940 நாட்கள்) முந்தைய சாதனையை முறியடித்து அதிக நாட்கள் தொடர்ச்சியாக இடைவிடாது செயல்பாட்டில் இருந்த அணுஉலை எனும் பெயரினை பெற்றுள்ளது.

15. **கண்ணூர் சர்வதேச விமானநிலையம்** : கண்ணூர் சர்வதேச விமான நிலையம் அமைந்ததினால் 4 சர்வதேச விமான நிலையங்கள் பெற்ற ஒரே இந்திய மாநிலம் எனும் பெருமையை கேரளா பெற்றுள்ளது.

16. **தோல் வங்கி** : கேரளாவிலுள்ள திருவனந்தபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நாட்டின் முதலாவது தோல் வங்கி அமைக்கப்படவுள்ளது.

17. **மாநில சட்டமன்ற தேர்தல்கள்** :

| மாநிலம் | நாள் | தொகுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| **ராஜஸ்தான்** | 7, டிசம்பர், 2018 | 200 |
| **தெலங்கானா** | 7, டிசம்பர், 2018 | 119 |

18. **தெய்வீகப் பூங்கா (Divine Park)** : ஆந்திரா அரசு திருப்பதியில் "தெய்வீக பூங்கா"வினை அமைக்க திட்டமிட்டுள்ளது.

19. **5ஜி தொழில்நுட்பம்** : டிராய் நிறுவன செயலாளர் எஸ்.கே.குப்தா 2020 ஆண்டிலிருந்து இந்தியாவில் 5ஜி தொழில்நுட்பம் பயன்பாட்டுக்கு வருமென தெரிவித்துள்ளார்.

20. **புவிசார் குறியீடு (GI Tag)** : ஒடிசா மாநிலத்தின் கந்தமால் ஹால்டி (மஞ்சள்) ஆனது புவிசார் குறியீட்டை பெற்றுள்ளது.

21. **ஆபரேஷன் ஒலிவா (Operation Olive)**: இந்தியக் கடலோர பாதுகாப்பு படையானது கடற்கரையோரம் சேரும் கடல் ஆமைகளை பாதுகாக்க ஆபரேஷன் ஒலிவாவினை தொடங்கியுள்ளது.

22. **குறைந்தபட்ச ஊதிய திட்டம்**: டில்லி அரசாங்கம் திறன்மிகு உழைப்பாளர்களுக்காக குறைந்தபட்ச ஊதிய செயல்திட்டத்தை **(Operation Minimum Wage)** அறிமுகப்படுத்தியுள்ளது.

23. இந்தியாவிலேயே முதன்முறையாக, உலகின் மூன்றாவது ரயில்வே பல்கலைக்கழகம் வதோதராவில் (குஜராத்) நிறுவப்பட்டுள்ளது.

24. **ஆண்களுக்கு குழந்தைப் பராமரிப்பு விடுமுறை** : மகாராஷ்டிர அரசு மனைவி அல்லது வாழ்க்கைத் துணைவர் உடல்நோயுற்று படுக்கையில் அவதிப்பட்டாலோ அல்லது மனநல சிக்கல்களுக்கு உள்ளானவராக இருந்தாலோ, தங்களின் குழந்தைகளை பராமரிக்க விடுமுறை எடுத்துக் கொள்ளலாம் என அறிவித்துள்ளது.

25. **அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் புதிய மாவட்டங்கள்**

- ஷி யோமி (Shi yomi) - 23வது மாநிலம்
- லேபா ராடா (Lepa Rada) - 24வது மாநிலம்

26. **நீருக்கு அடியில் அருங்காட்சியம்** : இந்தியாவின் முதலாவது நீருக்கு அடியில் அமைக்கப்பட்ட அருங்காட்சியகம் புதுச்சேரி கடற்கரையில் இந்திய கடற்படை ஐ.என்.எஸ். கடலூர் பகுதியில் திறக்கப்பட உள்ளது.

27. **சாபுர்கண்டி அணை திட்டம் (Shahpurkandi Dam Project)** : பஞ்சாபில் ராவி நதியில் சாபுர்கண்டி அணைத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

28. **@Cyberdost :** மத்திய உள்துறை அமைச்சகம் @Cyberdost எனும் டுவிட்டர் கணக்கினை தொடங்கி சைபர் குற்றங்கள் மற்றும் சாதாரண முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்த முனைந்துள்ளது.

29. **போகிபீல் மேம்பாலம் (Bogibeel Bridge) :** பிரம்மபுத்திரா நதியின் மீது கட்டப்பட்டுள்ள இந்தியாவின் முதலாவது மற்றும் ஆசியாவின் 2வது இரயில் - சாலை இணைந்த (4.94கி.மீ) தொலைவு நீளம் கொண்ட இரண்டடுக்கு போகிபீல் மேம்பாலம் ஆனது அஸ்ஸாம் மாநிலத்தில் பிரதமரால் திறந்து வைக்கப்பட்டது.

30. **இந்தியத் தபால் துறை தொடங்கியுள்ள திட்டங்கள்** :
    i) இ-வணிக இணையதளம் : e.com.indiapost.gov.in
    ii) POSB வாடிக்கையாளர்களுக்கான இணைய வங்கி.

31. **UAV வளாகம்** : அதானி குழுமம், ஹைதராபாத் நகரில் ஆளில்லா விமான வளாகத்தினை திறந்து வைத்துள்ளது. மார்ச், 2019 முதலாவது வான் கட்டமைப்பு உருவாக்கப்படும்.

32. பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 33% ஒதுக்கீடு வழங்க வேண்டும் என பஞ்சாப் அரசு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

33. **ஆசியச் சிங்கப் பாதுகாப்புத் திட்டம்** : சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றத்திற்காக மத்திய அமைச்சரவை இத்திட்டத்தை தொடங்கிவைத்துள்ளது. ஆசியச் சிங்கங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை பேணிக் காப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

34. **ஏரியில் மிதக்கும் சூரிய சக்தித் தகடுகள் (Floating Solar Panel in Lake) :** மின் உற்பத்திக்காக ஆந்திரப் பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்திற்கு அருகில் உள்ள ஏரியின் மீது நிலையாக பொருத்தப்பட்ட இந்தியாவின் முதலாவது மின் உற்பத்தி சூரிய சக்தி கலன்கள் அமைக்கப்பட்டுள்ளது.

35. **Ujjwala Sanitary Napkin Initiative :** உஜ்வாலா சுகாதார அணையாடைத் திட்டம் என்பது எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களால் ஒடிசா மாநிலத்தில் பெருநிறுவன சமூக பொறுப்பேற்பு சேவைத் திட்டத்தின் மூலம் தொடங்கப்பட்டுள்ளது.

36. **ஆத்யாத்மிக் விபாக் (Adhyatmik Vibhag)** : மத்தியப் பிரதேச அரசு புதிய ஆன்மீகத் துறை (ஆத்யாத்மிக் விபாக்) ஒன்றை தொடங்கவுள்ளது.

37. **ஒரு மாவட்டம், ஒரு பொருள் உற்பத்தி திட்டம் One District, One Product Scheme:**: இது உத்திர பிரதேச மாநில அரசால் அம்மாநில மக்களின் தனித்துவம் பெற்ற பொருட்கள் மற்றும் கைவினைப்பொருட்களை ஊக்குவிக்கும் நோக்கில் தொடங்கப்பட்டது.

38. **டிவிஜிங் திருவிழா (Dwijing Festival) :** சிராங் மாவட்டத்தில் ஏயி ஆற்றுக்கரையில் (River Aie) 27, டிசம்பர் அன்று நடக்கின்ற வருடாந்திர ஆற்றுத் திருவிழா ஆகும்.

39. இந்தியாவின் மிகப்பெரிய புற்றுநோய் மருத்துவமனையான தேசிய புற்றுநோய் நிறுவனம் ஹரியானாவின் ஜச்சார் மாவட்டத்தில் **(Jhajjar District)** திறக்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

# உலகம்

1. **G20 பியுனஸ் ஏர்ஸ் (Buenos Aires):**

    i) தலைமறைவு பொருளாதாரக் குற்றவாளிகள் குறித்தான 9 அம்ச செயல் திட்டம் ஆனது இந்தியா சார்பில் முன்வைக்கப்பட்டது.

    ii) 75வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு 2022க்கான G20 மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது.

2. புருண்டி நாட்டின் புதிய தலைநகர் ***ஜிடேகா (Gitega)*** ஆகும்.

3. **சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் தெற்காசிய பிராந்திய மையம்**: பிரதமர் நரேந்திர மோடி, வாரணாசி நகரில் சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் தெற்காசிய பிராந்திய மையத்தினை திறந்து வைத்தார்.

4. இந்தியாவில் பிறந்த ஆதித்யன் ராஜேஷ் எனும் 13 வயது சிறுவன் துபாய் நாட்டில் மென்பொருள் மேம்பாட்டு நிறுவனத்தின் உரிமையாளராக உள்ளார்.

5. ஜனவரி, 2019 முதல் OPEC எனும் பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பிலிருந்து கத்தார் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளது.

6. **சக்கரங்களின் மேல் மீன் காட்சியகம் (Aquarium on Wheels)**: சோவியத் நாட்டு தயாரிப்பான Zaporozhets மகிழ்வுந்து ஆனது மீன் காட்சியகமாக இரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

7. **மஞ்சள் அங்கில் பேராட்டங்கள் (Yellow Vests Protests):** பிரஞ்சு நாட்டில் அதிகரித்துள்ள அடிப்படை வாழ்க்கை முறை செலவினங்களுக்காகவும், பெட்ரோல் விலை உயர்வின் காரணமாகவும் மக்கள் ஒன்றிணைந்து அரசிற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

8. 2018-ஆம் ஆண்டினை பேரிடர் ஆண்டாக ஜப்பான் குறியிட்டுள்ளது.

9. பொதுமக்கள் போக்குவரத்து சேவையினை இலவசமாக்கிய முதல் நாடு எனும் பெருமையை லக்ஸம்பர்க் பெற்றுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

10. **சகிப்புத் தன்மைக்கான ஆண்டு** : ஐக்கிய அரபு எமிரேட் நாட்டின் ஜனாதிபதி 2019 ஆண்டினை (Year of Tolerance) சகிப்புத் தன்மைக்கான ஆண்டாக அறிவித்துள்ளார்.

11. ஆஸ்திரேலிய அரசு இஸ்ரேலின் தலைநகரமாக மேற்கு ஜெருசேலமை அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

12. **JUSTICE** : மெர்ரியம் - வெப்ஸ்டர் ஆனது JUSTICE என்பதை 2018ம் ஆண்டிற்கான வார்த்தையாக அறிவித்துள்ளது.

13. **கிரகடோவாவின் குழந்தை (Child of Krakatova)**: 23, டிசம்பர் 2018 நாளன்று கிரகடோவாவின் குழந்தை எனும் எரிமலை வெடிப்பின் காரணமாக இந்தோனேசியாவில் சுனாமி உருவாகியது.

14. **குளிர்கால சங்ராந்தி 2018** : 2018ம் ஆண்டிற்கான குளிர்கால சங்ராந்தி 21 டிசம்பர், 2018 அன்று நடந்தது. சங்ராந்தி வருடத்திற்கு இருமுறை நடக்கும். அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது ஒரு அரைக்கோளத்தில் ஒரு முறை நடக்கும்.

## *மாநாடு மற்றும் கருத்தரங்குகள்*

| மாநாடு / கருத்தரங்கு | நோக்கம் / குறிக்கோள் வெளிப்பாடு | இடம் | நாள் |
|---|---|---|---|
| **ஐ.நா.வின் பருவநிலை மாற்றத்திற்கான 24வது மாநாடு (Cop - 24)** | ஒரே உலகம், ஒரே சூரியன் ஒரே தொடரமைப்பு (One world one sun one Grid) | கடோவிஸ், போலாந்து | 3, டிசம்பர் 2018 |
| **இந்தியா நீர் தாக்க மாநாடு-2018 (India water Impact Summit 2018)** | இந்தியாவின் நீர் தொடர்பான சிக்கல்கள் குறித்து விவாதிக்க, தீர்வு மாதிரிகள் உருவாக்குவதற்கு பல்வேறு தரப்பினர் கூடும் வருடாந்திர நிகழ்வு | புது டில்லி | 6, டிசம்பர் 2018 |
| **4வது பங்கீட்டாளர்களின்** | பெண்கள், குழந்தைகள், இளம் பருவத்தினர் ஆகியோரின் உடல் நல | புதுடில்லி | 12, டிசம்பர் 2018 |

| | | | |
|---|---|---|---|
| **கூடுகை-2018** | மற்றும் நல்வாழ்விற்காக நடத்தப்பட்டது. | | |
| **சர்வதேச பிளாக் செயின் கருத்தொற்றுமை மாநாடு - 2018 (Global Blackchain Congress 'Consensus 2018' )** | கிழக்கிந்தியாவில் நடைபெற்ற முதலாவது சர்வதேச பிளாக்செயின் மாநாடு. | மேற்கு வங்காளம் | 18 முதல் 19 வரை, டிசம்பர் 2018 |

## திட்டங்கள் / யோஜனா

| திட்டங்கள் / யோஜனா | நோக்கம் / செய்திகளில் வெளிவரக் காரணம் | அமைச்சகம் / துறை | நாள் |
|---|---|---|---|
| **பிரசாத் திட்டம் (PRASAD - Pilgrimage Rejuvenation and spiritual, Heritage Augmentation Drive Scheme)** | உத்தரகாண்ட் - கங்கோத்ரி, யமுனோத்ரி, மத்திய பிரதேசத்தில் அமர்கண்டக், ஜார்க்கண்டில் - பரசுநாத், போன்ற ஆன்மீகம் சார்ந்த சுற்றுலாத் தளங்கள் போன்றவற்றில் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்புகளை ஏற்படுத்தி நிலையான சுற்றுலா பயணிகள் கவரும் இடங்களாக மாற்றுதல் | மத்திய அரசு | 4, டிசம்பர் 2018 |
| **முதலமைச்சரின் தீர்த் யாத்ரா யோஜனா (Mukya Mantri tirth Yatra Yojana)** | மூத்த குடிமக்களுக்காக | புது டில்லி அரசு | 6, டிசம்பர் 2018 |

## இராணுவப் பயிற்சிகள், டிசம்பர் 2018

| பாதுகாப்புப் பயிற்சியின் பெயர் | பங்கேற்ற நாடுகள் | பயிற்சி வகை | இடம் | நாள் |
|---|---|---|---|---|
| **Ex cope India 2018** | இந்தியா மற்றும் அமெரிக்கா | இருதரப்பு கூட்டு விமானப் பயிற்சி | மேற்கு வங்கம் | 3, டிசம்பர் 2018 |
| **10வது இந்திரா கடற்படை** | இந்தியா மற்றும் | கடற்படை பயிற்சி | விசாகப்பட்டினம், ஆந்திர பிரதேசம் | 2018 டிசம்பர் |

| | | | | |
|---|---|---|---|---|
| **(INDRA Navy)** | இரஷ்யா | | | 9 முதல் 16 வரை |
| **Clean Sea -2018** | இந்தியக் கடலோர பாதுகாப்பு படை | தேசிய எண்ணெய்க் கசிவு பேரழிவு தடுப்பு திட்டம் (Nos-DCP) | போர்ட் பிளேர், அந்தமான் நிகோபர் தீவுகள் | 6, டிசம்பர் 2018 |
| **AVIAINDRA** | இந்தியா மற்றும் இரஷ்யா | ஈராண்டிற்கொரு முறை நடக்கும் வான் பயிற்சி | ஜோத்பூர், ராஜஸ்தான் | 9, டிசம்பர் 2018 |
| **7வது Hand in Hand** | இந்தியா மற்றும் சீனா | கூட்டு இராணுப் பயிற்சி | செங்டு, சீனா | 10, டிசம்பர் 2018 |
| **ஷின்யு மைத்ரி 2018 (Shinyuu Maitiri)** | இந்தியா மற்றும் ஜப்பான் | இருதரப்பு விமான பயிற்சி | ஆக்ரா, உத்திரப் பிரதேசம் | 2018 டிசம்பர் 3 முதல் 7 வரை |
| **கொங்கன் 2018** | இந்தியா மற்றும் ஐக்கிய ராச்சியம் (UK) | இரு தரப்பு கடற்படை பயிற்சி | கோவா | நவம்பர் 28 முதல் டிசம்பர் 6, 2018 வரை |

## *ஏவப்பட்ட ராக்கெட்டுகள் - டிசம்பர் 2018*

| செயற்கைக்கோள் | நாடு | ஏவு வாகனம் | நோக்கம் | நாள் |
|---|---|---|---|---|
| **ஜிசாட் - 11 (இந்தியாவின் மிகவும் கனமான செயற்கைக்கோள் - தூக்கு எடை - 5854 கிலோகிராம்)** | இந்தியா | ஏரியன் - 5 (Ariane – 5) பிரெஞ்சு கயானா | இணைய பயன்பாடு வேக அதிகரிப்பிற்காக | 5, டிசம்பர் 2018 |
| **ஜிசாட் - 7A (Angry Bird)** | இந்தியா | (GSLV – F11) ஜிஎஸ்எல்வி - எப் 11 | 39 வது தொலைத் தொடர்பு செயற்கைக்கோள். இது இந்திய விமானப் படைக்கு விதமான பயன்படும் இராணுவ தொலைத் தொடர்பு செயற்கை கோள் ஆகும். | 19 டிசம்பர் 2018 |
| **சோயுசு திட்டம் (Soyuz Mission)** | ரஷ்யா | சோயுசு விண்வெளிகலன் | சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு மனிதர்களை அனுப்பும் திட்டம். | 3, டிசம்பர் 2018 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 1. ரஷ்யா : ஒலேக் கோனென்கோ<br>2. அமெரிக்கா : அன்னே மெக்லெய்ன்<br>3. கனடா : டேவிட் செய்ன்ட் ஜாக்யூஸ் | |
| **Change' e – 4 நிலவு ஆய்வுத் திட்டம்** | சீனா | லாங் மார்ச் - 3B (Long March - 3B) | நிலவின் மறு பகுதியினை ஆய்வு செய்வதற்கு | 8, டிசம்பர் 2018 |

## பாதுகாப்பு மற்றும் விண்வெளி

1. **அக்னி - 5 :** 2018 டிசம்பர் 11 ஆம் நாளன்று ஒடிசா மாநிலத்தில் உள்ள, டாக்டர் அப்துல் கலாம் தீவிலிருந்து, அக்னி - 5 (Agni) கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டது.

2. **ஆழ்கடல் நீர்மூழ்கு மீட்பு வாகனம் (DSRV - Deep Submergence Rescue Vehicle) :** ஆழ்கடலில் தவித்துக் கொண்டுள்ள நீர்மூழ்கி கப்பல் பணியாளர்களை மீட்பதற்கான வாகனம் மும்பையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

| புதிய கண்டுபிடிப்பு | வகை / நோக்கம் | இடம் |
|---|---|---|
| **கர்ப்பப்பை இடமாற்று அறுவை சிகிச்சை** | இறந்த நபரின் கர்ப்பப் பையினை இடமாற்றி பொருத்தப்பட்ட முதலாவது குழந்தை உயிருடன் பிறந்தது. | பிரேசில் |
| **பென்னு குறுங்கோள் (Bennu Asteroid)** | இது சூரிய குடும்பத்தில் கார்பன் நிறைந்த குறுங்கோளாகும். இதன் சுற்றுப்பாதை பூமியின் சுற்றுப்பாதைக்கு மிக அருகில் உள்ளது. | பூமியின் சுற்று வட்டத்திற்கு அருகில் |
| **Chemputer** | முப்பரிமாண முறையில் மூல வரைபடத்திலிருந்து மருந்துப் பொருட்களை உருவாக்கும் புதிய வழிமுறை. | லண்டன் |
| **மித்ரி - ரோபாட் (Mitri - Robrt)** | செயற்கை நுண்ணறிவு பெற்ற மித்ரி எனும் எந்திர மனிதனை (Smart works) நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது | பெங்களூர் |
| **போரிஸ் - ரோபாட் Boris Robot** | இரஷ்யர்கள் உருவாக்கிய அதி நவீன இயந்திர மனிதன் | இரஷ்யா |

| | | |
|---|---|---|
| **லோவோட் - ரோபாட் (Lovot - Robot)** | Lovot – Amalgam of Love & Robot. அன்பு மற்றும் இயந்திரம் இரண்டின் கலவையாக உருவாக்கப்பட்டுள்ளது. வீட்டுப் பணிகளில் உதவாது ஆனால் சுற்றத்துப் பொருட்களின் மீது அன்பு செலுத்தும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. | ஜப்பான் |
| **இ - திரிஸ்தி செயலி (e-drishti app)** | இரயில்வே அறிமுகப்படுத்தியுள்ளது. இரயில்களின் நேரத் தவறாமையினை துல்லியமாக கணிக்கும் செயலி ஆகும். | |
| **சிக்சா சேது செயலி (Shiksha Setu App)** | மாநில மாணவர்களுக்கு உதவும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. | ஹரியானா அரசு |

## புயல் / சூறாவளி / பெருஞ்சூறாவளிகள்

| **புயல் / சூறாவளி / பெருஞ்சூறாவளி** | **பாதிக்கப்பட்ட நாடு / மாநிலம்** | **நாள்** | **புயலுக்கு பெயரிட்ட நாடு** |
|---|---|---|---|
| **பெத்தாய் (Phethai) (இந்தாண்டின் 7வது புயல்)** | ஆந்திர பிரதேசம் | 17, டிசம்பர் 2018 | தாய்லாந்து |

## 2018 – ம் ஆண்டின் புயல்கள் பட்டியல்

| | |
|---|---|
| **அரபிக் கடல்** | சாகர் (Sagar) |
| | மெக்கேனு (Mekunu) |
| | லூபன் (Luban) |
| **வங்காள விரிகுடா** | டாயே (daye) |
| | டிட்லி (Titli) |
| | கஜா (Gaja) |
| | பெத்தாய் (Phethai) |

## பொருளாதாரம்

1. **“வேகமாக வளர்ந்து வரும் நகரங்கள்“** : உலகப் பொருளாதார ஆராய்ச்சி அறிக்கையின்படி (Global Economic Research Report) மிகவேகமாக வளர்ச்சியடைந்து வரும் சர்வதேச நகரங்களில் 20 நகரங்கள் இந்தியாவிலுள்ளன. மேலும் தமிழகத்தைச் சேர்ந்த 3 நகரங்கள் முதல் 10 இடங்களுள் உள்ளன.

| தரம் | நகரம் | வளர்ச்சி |
|---|---|---|
| **1.** | சூரத் | 9.2 |

| | | |
|---|---|---|
| **2.** | ஆக்ரா | 8.6 |
| **3.** | பெங்களூர் | 8.5 |
| **4.** | ஹைதராபாத் | 8.2 |
| **6.** | திருப்பூர் | 8.3 |
| **8.** | திருச்சி | 8.3 |
| **9.** | சென்னை | 8.2 |

2. ரிசர்வ் வங்கி ஆனது டிஜிட்டல் பணம் பரிமாற்றங்களுக்கான "குறை தீர்ப்பாளர் திட்டம்" (Ombudsman scheme) எனும் திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது.

3. **eATM:** இது ஐசிஐசிஐ வங்கியினால் உடனடி நிதி பெறும் வகையிலான உடனடி கடன் வசதியாகும்.

4. **இ-பணம் செலுத்துதல்:** புனேவிலுள்ள மாவட்ட மற்றும் குற்றவியல் நீதிமன்றம் இந்தியாவின் முதலாவது இ-பண செலுத்துதல் வசதிபெற்ற நீதிமன்றமாகும்.

5. **பாலின இடைவெளி அறிக்கை 2018 (Gender Gap Report 2018):** உலக பொருளாதார மன்றம் (WEF) 2018 அறிக்கையின் படி, பாலின இடைவெளி அறிக்கையில் இந்தியாவானது 149 நாடுகளில் 108வது இடத்தை பெற்றுள்ளது.

6. **நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீடு (Sustainable Development Goals Index)** : நிதி ஆயோக் வெளியிட்ட பட்டியலில் இமாச்சல பிரதேசம், கேரளம், தமிழகம் ஆகிய மூன்று மாநிலங்கள் முதல் 3 இடங்களைப் பெற்றுள்ளன.

## *விருதுகள்*

| விருதுகள் / பரிசுகள் | நபர் / நிறுவனம் |
|---|---|
| **கால்பந்து விருதுகள்** | குரோஷியா லூகா மாட்ரித் - பாலன்டி ஆர் விருது (Ballon d'or Award) |
| | நார்வே அடா ஹெசெர்பேர்க் - முதலாவது பெண் பாலன்டி ஆர் விருது |
| | கைலியன் பாம்பே - சிறந்த இளம் விரர் |
| **கோல்டன் ஷூ விருது - கால்பந்து** | லியோனல் மெஸ்ஸி - 5வது கோல்டன் ஷூ விருது. |
| **ITTF Breakthrough Star Award 2018 – டேபிள் டென்னிஸ்** | மனிகா பத்ரா |
| **Skoch முதலமைச்சர் விருது / 2017 (Skoch chief minister of the Year Award)** | மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி |

| | |
|---|---|
| **68வது உலக அழகி 2018** | வனெசா பான்ஸ், மெக்ஸிகோ (67வது - மனுஷி சில்லார், இந்தியா) |
| **2018 பிரபஞ்ச அழகி** | கேட்ரியோனா கிரே - பிலிப்பைன்ஸ் |
| **மிஸ் இந்தியா (உலகளவில்) 2018** | ஸ்ரீ சைனி |
| **54வது ஞானபீட விருது** | அமிதவ் கோஷ் - முதலாவது ஆங்கில புனைவு எழுத்தாளர். |
| **கிரிஷி கர்மன் விருது (Krishi Karman award)** | ஜார்க்கண்ட் . (அரிசி பிரிவிற்காக) |
| **மேக்தூத் விருது (சிறந்த தபால்காரர்)** | கே. கணபதி மற்றும் ஸ்ரீ வித்யா எஸ். ஐயர் |
| **சரணாலய வனவிலங்கு சேவைகள் விருது, 2018** | இம்ரான் சித்திக் |
| **DSCI சிறப்பு விருது - (சைபர் பாதுகாப்பு கல்விக்காக)** | ஐஐடி காரக்பூர் |
| **மகாகவி பாரதி விருது** | கே.விஸ்வநாத் |
| **கிணெய்ட்ஸ்மென் விருது** | மலாலா யூசப்சாய் |
| **சிறந்த பெண் பாராளுமன்ற உறுப்பினர் (ராஜ்ய சபா)** | பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி |
| **டர்னர் பரிசு 2018** | சார்லொட்டே பிராட்ஜர் |
| **இ-இந்தியா டிஜிட்டல் மாற்ற விருது** | பெல் நிறுவனம் (BHEL) |

## செய்திகளில் வந்த நியமனங்கள் மற்றும் நபர்கள்

| நபர்கள் | பொறுப்பு / பதவி |
|---|---|
| **சக்திகாந்தா தாஸ்** | ரிசர்வ் வங்கியின் புதிய ஆளுநர் - 25வது ரிசர்வ் வங்கி ஆளுநர். |
| **கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன்** | தலைமைப் பொருளாதார ஆலோசகர் |
| **அருந்ததி பட்டாச்சார்யா** | SWIFT (Society for Worldwide Interbank Financial Telecommunication) அமைப்பின் தலைவர் |
| **ராஜிவ் மெஹ்ரிஷி - CAG** | ஐக்கிய நாடுகள் அமைப்பின் தணிக்கைக் குழுவின் துணைத் தலைவர் |
| **பிஜேந்திர பால் சிங்** | இந்திய திரைப்பட தொலைக் காட்சி நிறுவனத் தலைவர் |

| | |
|---|---|
| ஸ்ரீ ராம்பால் பவார் | தேசிய குற்ற ஆவணப் பதிவகத்தின் இயக்குனர் |
| மாதவி காரடியா திவான் | கூடுதல் சட்ட வழக்குரைஞர் (additional solicitor general) |
| **W.V.**ராமன் | இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளர். |

## *புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர்கள்*

| மாநிலம் | முதல்வர் |
|---|---|
| தெலுங்கானா | கே. சந்திரசேகர ராவ் |
| மிசோரம் | பு சோரம்தங்கா |
| மத்திய பிரதேசம் | கமல் நாத் |
| ராஜஸ்தான் | அசோக் கெலாட் |
| சத்தீஸ்கர் | பூபேஷ் பாகேல் |

## *புத்தகம் மற்றும் ஆசிரியர்கள்*

| புத்தகம் | ஆசிரியர் |
|---|---|
| **Changing India** | முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் |
| **Around the world in 80 trees** | ஜோனாதன் டிரோரி |
| **Titan: Inside India's Most Successful Consumer Brand** | வினய் கமத் |
| **How to invest Right and Prosper** | ஏ.கே.நாராயன் |
| **A game changer's memoir : Ex: SEBI Chief. Recounts Desining Moments of his Tenure** | ஜி.என் - பாஜ்பாய் (G.N. BajPai) |
| **Service to the Nation** | ப. சபாநாயகம் |
| **Choose life: the graphical call to Revolt** | எரிக் கட்கைண்ட் |
| இராமக்கதையும் இராமாயணமும் | அ.அ மணவாளன் |
| **The 99 day diversity challenge** | டாக்டர் சவுந்தர்யா ராஜேஷ் |
| **Emergency Chronicles:** இந்திரா காந்தி மற்றும் ஜனநாயகத்தின் திருப்பு முனை | கியான் பிரகாஷ் |
| **A people's constitution : The Everyday life of law in the Indian Republic.** | ரோகித் டே |

| | |
|---|---|
| **Polio : The Odyssey of Eradication** | தாமஸ் ஆப்ரகாம் |

## விளையாட்டு

1. **BWF உலக சாம்பியன் ஷிப்** : இந்தியாவின் பி.வி.சிந்து ஜப்பானின் நோசோமி ஒகுராவை வீழ்த்தி BWF உலக சாம்பியன்ஷிப் பட்டம் வென்றார். இறுதிப் போட்டி குவாங்சவ் (சீனா) நடைபெற்றது.

2. **மீத்தொயி லெய்மா (Meethoileima):** மணிப்பூர் அரசு குத்துச் சண்டை வீராங்கனை மேரிகோமுக்கு மீத்தொயி லெய்மா எனும் பட்டம் வழங்கி கவுரவித்துள்ளது.

3. டெஸ்ட் தொடரில் அதிவேகமாக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் எனும் பெருமையை பாகிஸ்தானைச் சேர்ந்த யாசர் ஷா, 33 போட்டிகளில் 200 விக்கெட்டுகள் வீழ்த்தியதன் மூலம் பெற்றுள்ளார்.

4. ஹாக்கி ஆடவர் உலகக் கோப்பை 2018 : ஒடிசா மாநிலம் புவனேஷ்வரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நெதர்லாந்தை தோற்கடித்து பெல்ஜியம் வெற்றி பெற்றது.

5. ஜோஷ்னா சின்னப்பா தேசிய ஸ்குவாஷ் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார்.

6. சீனியர் தேசிய செஸ் பட்டத்தை அரவிந்த சிதம்பரம் வென்றுள்ளார்.

## முக்கிய தினங்கள்

| நாள் | நிகழ்வுகள் | கருத்துரு / முக்கியத்துவம் |
|---|---|---|
| **டிசம்பர், 1** | உலக எய்ட்ஸ் தினம் | “உனது நிலைமையை அறிந்து கொள்” (Know your Status). |
| **டிசம்பர், 2** | தேசிய மாசு கட்டுப்பாட்டு தினம் | போபால் விச வாயு தாக்குதலினால் இறந்த மக்களை நினைவு கூறும் நாள் |
| | சர்வதேச அடிமை முறை ஒழிப்பு தினம் | “மனிதர்களை கடத்துதல் மற்றும் விபச்சாரத்திற்கு உட்படுத்துதல் போன்றவற்றை ஒடுக்குவது”. |
| **டிசம்பர், 3** | தேசிய மாற்றுத் திறனாளிகள் நாள் | “மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பது, சமத்துவ மற்றும் உள்ளடங்கிய சமூகத்தை உறுதி செய்தல்”. |
| **டிசம்பர், 4** | தேசிய கடற்படை தினம் | |

ZERO SHANKAR IAS ACADEMY CURRENT AFFAIRS

| | | |
|---|---|---|
| **டிசம்பர், 5** | உலக மண் தினம் | “Be the Solution to Soil Pollution” |
| | சர்வதேச தன்னார்வலர் தினம் | “தன்னார்வலர்கள் மீண்டெழும் சமூகத்தை கட்டமைக்கின்றனர்”. |
| **டிசம்பர், 6** | டாக்டர் அம்பேத்கரின் நினைவு தினம் | இந்திய அரசியலமைப்பின் தந்தை என்றழைக்கப்படுபவர். அரசியலமைப்பு அவையில் சட்ட வரைவுக் குழு தலைவராக செயல்பட்டவர். |
| **டிசம்பர், 7** | பாதுகாப்புப் படைகளின் கொடி தினம் | தாய்நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டிற்காகவும் நாட்டின் நன்மைக்காகவும், போராடி உயிர் நீத்த வீரர்கள், அவர்களின் குடும்பங்கள், விதவைப் பெண்கள், உடல் ஊனமுற்றோர், முன்னாள் வீரர்கள் ஆகியோரை நினைவு கூறும் நாள். |
| **டிசம்பர், 8** | நீர்மூழ்கி தினம் | |
| **டிசம்பர், 9** | சர்வதேச ஊழல் ஒழிப்பு தினம் | “ஊழலுக்கு எதிராக ஒன்றிணைவோம்” , (United Against Corruption) |
| **டிசம்பர், 10** | சர்வதேச மனித உரிமைகள் தினம் | “Stand up for Human Rights” |
| **டிசம்பர், 11** | சர்வதேச மலைகள் தினம் | “Mountains Matter” |
| | UNICEF தினம் | |
| **டிசம்பர், 12** | சர்வதேச உடல்நல பாதுகாப்பு தினம் | “உலகளாவிய உடல் நல பாதுகாப்பிற்காக ஒன்றுபடுவோம் : இணைந்து செயல்பட இதுவே சரியான நேரம்” |
| | சர்வதேச சமநிலைக்கான தினம் | |
| **டிசம்பர், 14** | தேசிய ஆற்றல் சேமிப்பு தினம் | |
| **டிசம்பர், 15** | சர்வதேச தேயிலை தினம் | |
| **டிசம்பர், 16** | 47வது விஜய் திவாஸ் | நாட்டிற்காக உயிர் நீத்த தியாகிகளுக்கு நினைவஞ்சலி மற்றும் மரியாதை செய்தல். |
| **டிசம்பர், 18** | சர்வதேச புலம் பெயர்வு தினம் | “கண்ணியத்துடன் புலம்பெயர்வு” |
| **டிசம்பர், 22** | தேசிய கணித நாள் | |
| **டிசம்பர், 23** | தேசிய விவசாயிகள் தினம் | |
| **டிசம்பர், 24** | தேசிய நுகர்வோர் தினம் | |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS